FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8129883

1. District : தஞ்சாவூர் மாவட்டம் PS: V & AC காவல்நிலையம் Year: 2025 ஆண்டு FIR No: 07/25 முத.அ. எண் Date: 16.10.25 நாள்

2. (i) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106

(ii) Act சட்டம்: Prevention of Corruption Act Sections பிரிவுகள்: 7, 7A, 8 r/w 12 of

(iii) Act சட்டம்: 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: PC Act, 1988 as amended in 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 15.10.25 Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 15.30 Time to : நேரம் வரை 23.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 16.10.25 Time : நேரம் 10.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 16.10.25 Time : நேரம் 11.00 hrs FIR registered

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் தேவோணம் ஊராட்சி ஒன்றியம் 40 km அருகே

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address முகவரி BDO office, தேவோணம், தஞ்சாவூர் மாவட்டம்

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. தமிழ்செல்வன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் முருகேசன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 44/25 (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் முதுநிலை உதவியாளர் அரசுவாணம் (g) Address : முகவரி I D Section, மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tmt. Sudha 51/25 Dy. B.D.O, Noornadu, 2) Tr. V. Manoharan 60/25 Driver (ஒன்றிய அலுவலகம்), 3. Mr. Mahendran 47/25, Asst., Noornadu, 4. Tmt. K. Poornima 38/25 Typist, 5. Tr. Muthuvazhagan, பணிவேலம்பாளையம் village BDO office Kin. 6. Tr. Ramamoorthy 54/25 7. S/o. வேலாயுதம், Contractor தே. 2198355/25 S/o. கதிரையன் ஏரிபட்டி, தேவோணம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 16.10.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P. PADMAVATHI
Rank: நிலை Inspector of Police No. எண் VAC, Thanjavur.

FIR Contents in Column Number 12 of the Thanjavur V&AC Crime Number 07/2025, U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of Pc Act 1988 (as amended in 2018)-ன்தொடர்ச்சி..

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.....

இன்று 16.10.2025-ஆம் தேதி காலை 10.30 மணியளவில் தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஐ.2 பிரிவில் முதுநிலை ஆய்வாளராகப் பணிபுரிந்து வரும் திரு.ஆ.ரவிக்குமார் என்பவர் கொடுத்தப் புகாரைப் பெற்று வழக்குப் பதிவு செய்த விவரம் பின்வருமாறு, அனுப்புநர் ஆ.ரவிக்குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், ஐ-2 பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர். அய்யா, நான், 15.10.2025 அன்று மதியம் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியிலிருந்தபோது, தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் வட்டம், காவாளிப்பட்டி ஊராட்சியில் கந்தர்வகோட்டை – பட்டுக்கோட்டை சாலை செல்லும் சாலையின் தெற்குப்புறம் அமைந்துள்ள திருவோணம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்களிடமும், கட்டட வரைபட அனுமதி, மனைவரன்முறை செய்தல், வரி உத்தரவு வழங்கல், குடிநீர் இணைப்பு போன்ற சேவைகளை வழங்குவதற்கு பொதுமக்களிடமும் கையூட்டாக பணம் வசூல் செய்து வருவதாக தஞ்சாவூர் மாவட்ட துணை ஆய்வுக் குழு அலுவலருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி, அவர் எனக்கு கொடுத்த வாய்மொழி உத்தரவின்படி, மாவட்ட ஆய்வுக் குழு உறுப்பினர் என்ற முறையில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஐ-2' பிரிவில் முதுநிலை வருவாய் ஆய்வாளராகிய நானும், தஞ்சாவூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பத்மாவதி அவர்கள் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் 14.30 மணிக்கு புறப்பட்டு, திருவோணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு 15.30 மணியளவில் வந்தடைந்து மேற்படி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதணை நடவடிக்கை விவரம் பின்வருமாறு:

2) மேற்படி திடீர் சோதனையின் போது மாவட்ட துணை ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவில் இருந்த அலுவலர்கள் விபரம்:

(1) திரு. ஆ.ரவிக்குமார், த/பெ. ஆறுமுகம், முதுநிலை வருவாய் ஆய்வாளர், 'ஐ-2' பிரிவு, மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர்.

(2) திருமதி.P.பத்மாவதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, தஞ்சாவூர்.

3) திருவோணம் வட்டார வளர்ச்சி அலுவலகமானது கந்தர்வகோட்டை - பட்டுக்கோட்டை சாலை செல்லும் சாலை, காவாளிப்பட்டி ஊராட்சியில் தெற்குப்புறம், வடக்குத்திசை பார்த்தவாறு அமைந்துள்ள அரசு அலுவலகமானது தரைத்தளம் மற்றும் முதல்தளத்துடன் கூடிய RCC கட்டடத்தில் இயங்கி வருகிறது. திருவோணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு கிழக்குப்புறம் ஒரு நுழைவு வாயிலும், மேற்குபுறம் ஒரு நுழைவு வாயிலும் அமைந்துள்ளது. திருவோணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மேற்கு திசையில் வட்டார அளவிலான குழு கூட்டமைப்பு அலுவலகக் கட்டடமும், தென் மேற்கு மூலையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் திட்ட வளர்ச்சி அலுவலகக் கட்டடமும், வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் வடகிழக்கு திசையில் சுயஉதவிக் குழுவால் நடத்தப்படும் Redroses தேநீர் கடையும், கிழக்குத் திசையில் கணினி தகவல் மைய கட்டமும் கட்டடமும் அமைந்துள்ளது, அலுவலகத்தின் தெற்கு திசையில் (பின்புறம்) தென்னை மரங்கள் வைக்கப்பட்டுள்ளன. திருவோணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் வராண்டாவில் TN 49 G 1141 என்ற பதிவெண் கொண்ட வெள்ளை நிற SCORPIO வாகனம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. அரசு வாகனத்தின் பின்புறம் சற்று தொலைவில் TN 49 DZ 8527 என்ற பதிவெண் கொண்ட Ertiga நான்கு சக்கர வாகனமும் நின்று கொண்டிருந்தது. வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் தரைதளத்தில் வட்டார வளர்ச்சி பிரிவு அலுவலகமும், முதல் தளத்தில் கிராம ஊராட்சி பிரிவு அலுவலகமும் இயங்கி வருகிறது. அலுவலகத்தின் வெளிப்புறத்தில் CCTV பொருத்தப்பட்டுள்ளது.

4) வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் தரைதளத்தில், வடகிழக்கு திசையில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அறை அமைந்துள்ளது. அவ்வறை பூட்டப்பட்டிருந்தது. அலுவலகத்தின் முதல் தளத்தின் வடகிழக்கு திசையில் முதல் தளத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அறை அமைந்துள்ளது. அவ்வறையில் அமர்ந்திருந்தவரிடம் ஆயவுக்குழு அலுவலர் திரு. ஆ.ரவிக்குமார் மற்றும் ஆய்வாளர் திருமதி. பத்மாவதி ஆகியோர் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு திடீர் சோதனைக்காக வந்துள்ளதாகவும், அதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொண்டனர். திரு. சாமிநாதன் அவர்களிடம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களை பற்றி விசாரித்தபோது அவர் சென்னைக்கு பயிற்சிக்காக சென்றுள்ளதாக தெரிவித்தார். பின்னர் திரு. சாமிநாதன் (வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)) அவர்களை சோதனை செய்த போது அவரிடம் ரூ. 300/- பணம் இருந்தது, அவர் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்ததால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. திரு. சாமிநாதன் அவர்களிடம் CCTV கேமரா குறித்து விசாரணை செய்ய அலுவலகத்தை சுற்றி ஆறு கேமரா பொறுத்தப்பட்டுள்ளதாகவும், நுழைவு வாயிலில் ஒரு கேமராவும், முதல் தளத்தில் ஓர கேமராவும் பொறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

5) மேற்சொன்ன அலுவலகத்ததின் தரைதளத்திற்கு வந்து பூட்டிய நிலையிலிருந்த வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அறையை திறக்கச்சொல்லி சோதனை செய்யப்பட்டதில் ஏதும் காணப்படவில்லை. வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களின் அறைக்கு தெற்குபுறத்தில் வட்டார ஊராட்சி அலுவலகப்பிரிவு அமைந்துள்ளது. அவ்வலுவலகப்பிரிவில் இருந்தவர்கள் விபரம் பின்வருமாறு.

வ. எண்.	பெயர் & முகவரி	தொகை விவரம்	விளக்கம்
1.	திரு.து.நாகராஜன் 59/2025 த/பெ.துரைசாமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (நிர்வாகம்), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	5,900/-	தீபாவளி செலவிற்காக இன்று காலையில் வங்கி ATM-இல் எடுத்த பணம் என்று தெரிவித்தார்.அவரத விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. (ATM Transaction number 528806544462)
2.	திரு.பார்த்திபன், வயது 36/2025 த/பெ.முருகேசன், அலுவலக உதவியாளர், பிள்ளையார்பட்டி, தஞ்சாவூர்.	70/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
3.	ம.திலீபன் 27/2025, த/பெ.மலையப்பன், ஓவர்சீயர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	--	பணம் ஏதும் காணப்படவில்லை.
4.	திரு.ரமேஷ் 37/2025 த/பெ.வெள்ளச்சாமி, அலுவலக உதவியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	180/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

5.	திரு.கோ.பாலசுப்ரமணியன் 57/2025, இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	--	பணம் ஏதும் காணப்படவிலலை.
6.	செல்வி.மு.உமாபாரதி 25/2025, த/பெ.முத்துசாமி, உதவியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	120	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
7.	திரு.அ.முத்துபாண்டியன் 50/2025, த/பெ.அய்யாதுரை பாண்டியன், உதவியாளர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	--	பணம் ஏதும் காணப்படவில்லை.
8.	திரு.வெ.நாகராஜன் 58/2025, த/பெ.வெள்ளையன், பஞ்சாயத்து செகரட்டரி, திருவோணம்.	--	பணம் ஏதும் காணப்படவில்லை.

6) மேற்சொன்ன வட்டார வளர்ச்சி அலுவலகப்பிரிவில் கீழ்கண்ட நபர்களிடம் காணப்பட்ட பணம் சரியான முகாந்திரம் கூறாதததால் தகுந்த மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

வ. எண்.	பெயர் & முகவரி	தொகை விவரம்	விளக்கம்
1	திருமதி.சுதா, வயது 51/2025, த/பெ.மாணிக்கம் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், (சத்துணவு), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம், Resi: எண்.222 கோட்டை தெரு, பட்டுக்கோட்டை தஞ்சாவூர்,	ரூ.9,300/-	தனது மகளின் மருத்துவ செலவிற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார்.

2	திருமதி.து.மகேஸ்வரி, வயது 47/2025, த/பெ.துரையரசன், உதவியாளர், சத்துணவு பிரிவு, ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	ரூ,3080/-	தனது வீட்டிற்கு தேவையான சடங்குப் பொருட்கள் வாங்குவதற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார்.
3	திரு.வி.மனோகரன், 60/2025, த/பெ.விஸ்வலிங்கம், ஓட்டுநர் (ஒன்றிய பெருந்தலைவர்) திருவோணம்.	ரூ,6,150/-	தனது வீட்டிற்கு பொருட்கள் வாங்குவதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவத்தார்.
4	திருமதி.கா.பூர்ணிமா 33/2025, த/பெ.காமராஜ், தட்டச்சர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	1,660/-	தன்னுடைய காது சிகிச்சைக்காக கணவரிடம் வாங்கி வந்த பணம் என்று தெரிவித்தார்.
5	திரு.க.வீரமுத்து 55/2025, த/பெ.கருப்பையா, ஒப்பந்ததாரர், எண்.349, ராஜாளி விடுதி, திருவோணம் அஞ்சல், திருவோணம்.	14,400/-	தன்னிடம் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார்.

7) திருவோணம் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களால் கடந்த 29-08-2024ஆம் தேதி திடீராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்தீடீராய்வு குறிப்பின் காலம்-5இல் தனிநபர் பணப்பதிவேடு பராமரிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது வரை இவ்வலுவலகத்தில் தனிநபர் பண இருப்பு பதிவேடு பராமரிக்கப்படவில்லை. இதனால் பத்தி-6இன் கீழ் கண்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நபர்கள் கூறிய விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் இல்லாததால் அவர்களிடமிருந்த தொகை மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

8) மேற்சொன்ன அலுவலகப்பிரிவின் தெற்கு புறத்தில் கணினி அறை, பதிவேடு வைப்பறை, காணொளிக்காட்சி கூட்ட அறை ஆகியவை அமைந்துள்ளது. அவ்வறைகளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான ஆவணமோ பணமா கிடைக்கதவில்லை. காணொளிக்காட்சி கூட்ட அறையின் தெற்குபுறத்தில் அலுவலக கழிவறை அமைந்துள்ளது.

9) வட்டார வளர்ச்சி அலுவலக தரைதளத்தின் மேற்கு புறத்தில் திருவோணம் ஒன்றிய பெருந்தலைவர் அறை காணப்பட்டது. ஒன்றிய பெருந்தலைவர் அறைக்கு தெற்கில் ஊராட்சி மன்ற தலைவர்கள், வார்டு உறுப்பினர்கள் கூட்ட அறையும், அந்த அறைக்கு தெற்குப்புறம் பதிவேடுகள் வைப்பறையும் அமைந்துள்ளது. அவ்வறைகளை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ, பணமோ காணப்படவில்லை.

10) மேற்சொன்ன அலுவலகத்தின் முதல்தளத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்கள் அறையின் தெற்குப்புறத்தில் திருவோணம் வட்டார கிராம ஊராட்சி அலுவலகப்பிரிவு அமைந்துள்ளது. அவ்வலுவலகப்பிரிவில் இருந்தவர்கள் விபரம் பின்வருமாறு.

வ. எண்.	பெயர் & முகவரி	தொகை விவரம்	விளக்கம்
1.	திருமதி. K. அனுஷியா, வயது 34/2025, க/பெ. வீரக்குமார், உதவியாளர், BLA, B1 இருக்கை, வட்டார வளர்ச்சி அலுவலகம் (கிராம ஊராட்சி), திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்.	120/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
2.	திருமதி. தமயந்தி, வயது 45/2025, அலுவலக உதவியாளர், வட்டார வளர்ச்சி அலுவலகம் (கிராம ஊராட்சி), திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்.	550/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
3.	திருமதி. அபிதா, வயது 27/2025, க/பெ. சக்திவேல், கணினி இயக்குநர், (தொகுப்பூதிய பணியாளர்) AGAMT திட்டம்,	200/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப

	வட்டார வளர்ச்சி அலுவலகம் (கிராம ஊராட்சி), திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்		ஒப்படைக்கப்பட்டது
4.	திருமதி. மனோகரி, க/பெ. சசிக்குமார், கணினி இயக்குநர், (தொகுப்பூதிய பணியாளர்) PMAY திட்டம், வட்டார வளர்ச்சி அலுவலகம் (கிராம ஊராட்சி), திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்	150/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது
5.	திரு. முத்தமிழ்செல்வன், வயது 24/2025, த/பெ. செல்வராஜ், இளநிலை உதவியாளர், வட்டார வளர்ச்சி அலுவலகம் (கிராம ஊராட்சி), திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்	120/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
6.	திருமதி. நித்யா, வயது 28/2025, க/பெ. சாமிநாதன், கணினி இயக்குநர், (தொகுப்பூதிய பணியாளர்) SBM திட்டம், வட்டார வளர்ச்சி அலுவலகம் (கிராம ஊராட்சி), திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்	100/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
7.	திருமதி. அருள்மணி, வயது 42/2025, க/பெ. ராமையன், கணினி இயக்குநர், (தொகுப்பூதிய பணியாளர்) SBM திட்டம், வட்டார வளர்ச்சி அலுவலகம்	150/-	தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவரது பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

	(கி.ஊ), திருவோணம் ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் மாவட்டம்.		

11) மேற்சொன்ன அலுவலகத்தின் முதல்தளத்தின் மேற்கு திசையில் பொறியியல் பிரிவு அமைந்துள்ளது. அவ்வறையை சோதனை செய்ததில் உதவிப் பொறியாளர்கள் திரு. திருவாசகம், திரு. ரமேஷ் மற்றும் ஒப்பந்ததாரர் திரு. இராமமூர்த்தி ஆகியோர் அமர்ந்திருந்தனர். இதில் உதவிப் பொறியாளர் திரு. ரமேஷ் அவர்களிடம் திரு. இராமமூர்திதி அவர்கள் பேசிக்கொண்டிருந்தார். பொறியியல் பிரிவு அலுவலகத்தை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ, பணமோ ஏதும் காணப்படவில்லை.

12) திருவோணம் வட்டா வளர்ச்சி அலுவலக முதல்தளத்தின் பொறியியல் பிரிவு அலுவலகத்திற்கு தெற்குப்புறத்தில் பணி மேற்வேயாளர்கள் அறை அமைந்துள்ளது. அவ்வறையில் காணப்பட்ட நபர்களின் விபரம் பின்வருமாறு.

வ. எண்.	பெயர் & முகவரி	தொகை விவரம்	விளக்கம்
1.	திருமதி,வளர்மதி, வயது 44/2025, க/பெ. கமலராஜன், 38, பூக்காரத் 3 ஆம் தெரு, விளார் சாலை, தஞ்சாவூர், ஓவர்சியர், திருவோணம் வட்டார வளர்ச்சி அலுவலகம்,	--	பணம் ஏதும் இல்லை
2.	திரு.ஜோதிவேல், வயது 36/25, த/பெ.தங்கராஜ், இடையாத்தி, மேலக்கோனார் தெரு, தஞ்சாவூர்.	1120/-	தனக்கு அரசு திட்டத்தின் கீழ் வீடு கட்டும் திட்டம் தொடர்பாக ஓவர்சியரைப்ப பார்க்க வந்திருப்பதாகவும், தனது செலவிற்காக ரூ.1120/- வைத்திருந்ததாக விளக்கம் அளித்தார். விளக்கம் ஏற்கப்பட்டு பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.சி.சிவக்குமார் 32/2025 த/பெ.சுப்ரமணியன், Technical Asst. (Temp),	1,250/-	தனது செலவிற்காக ரூ.1250/- வைத்திருந்ததாக விளக்கம் அளித்தார். விளக்கம் ஏற்கப்பட்டு

	ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.		பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
4.	திரு.சு.சுரேந்திரன் 32/2025, த/பெ.சுப்ரமணியன், Technical Asst.(Temp), ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	50/-	தனது செலவிற்காக ரூ.1250/- வைத்திருந்ததாக விளக்கம் அளித்தார். விளக்கம் ஏற்கப்பட்டு பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
5.	திரு.சி.ராமசாமி 34/2025, த/பெ.சிவக்கொழுந்து, வடக்கு நத்தம், ஒரத்தநாடு, தஞ்சாவூர்.	70/-	தனியார் ஒப்பந்ததாரர் என்றும் கிராமபுறங்களில் நடைபெறும் NRGS திட்டப் பணிகள் தொடர்பாக அறிவிப்பு பலகை வைத்ததாகவும், அதற்கு பில் தொகை வேண்டி மனு அளிப்பதற்கு வந்ததாக கூறினார். தனது செலவிற்காக ரூ.70/- வைத்திருந்ததாக விளக்கம் அளித்தார். விளக்கம் ஏற்கப்பட்டு பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
6.	திரு.வே.ராமமூர்த்தி 51/2025, த/பெ.வேலாயுதம், யூனியன் காண்ராக்டர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	--	பணம் ஏதும் காணப்படவில்லை
7.	திருமதி.G.மஞ்சுளா 56/2025, க/பெ.சேகர், ஓவர்சீயர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	--	பணம் ஏதும் காணப்படவில்லை
8.	திரு.ச.நாகேஸ்வரன் 31/2025, த/பெ.சத்தியமூர்த்தி, ஓவர்சீயர், ஊராட்சி ஒன்றிய அலுவலகம், திருவோணம்.	130	தனது சொந்த செலவுக்காக பணம் வைத்துள்ளதாக தெரிவித்தார். விளக்கம் ஏற்கப்பட்டு பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

13) மேற்சொன்ன பணிமேற்பார்வையாளர் அறையின் வடமேற்கு மூலையில் பணிமேற்பார்வையாளர் திரு. மதியழகன் என்பவர் இருக்கை அமைந்திருந்தது. திரு. மதியழகன் என்பவர் களஆய்விற்கு சென்றுள்ளதால், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சாமிநாதன் அவர்கள் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. திரு. மதியழகன் என்பவர் அலுவல் உபயோகப் பையில் SBI Card ஊதா நிற கவரினுள் ரூ. 1200/- பணம் இருந்தது. தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தும் திரு. மதியழகன் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு ஆஜராகததால் மேற்சொன்ன பணம் ரூ.1200/- சந்தேகத்திற்கிடமான பணம் என்று மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

14) பணிமேற்பார்வையாளர்கள் அறையின் தெற்குபுறத்தில் கணினி ஆப்ரேட்டர் காணப்பட்டது. அவ்வறையை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான பணமோ, ஆவணங்களோ காணப்படவில்லை.

15) பின்னர் அலுவலகத்தின் வெளியே வந்து வராண்டாவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த TN 49 G 1141 வெள்ளை நிற scorpio அரசு வாகனத்தை சோதனை செய்ததில் சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ, பணமோ காணப்படவில்லை. பின்னர் அரசு வாகனத்தின் பின்புறம் (கிழக்கு திசையில்) சற்று தூரமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த சந்தேகத்திற்கிடமான TN 49 DZ 8527 வெள்ளை நிற Ertiga வாகனத்தின் உரிமையாளர் யார் என்று விசாரித்தபோது அவ்வாகனம் ஒப்பந்ததாரர் திரு. இராமமூர்த்தி அவர்களுடைய வாகனம் என்று தெரிவித்தார். பின்னர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்னிலையில் வாகனத்தை சோதனை செய்தபோது வாகனத்தின் பின்இருக்கையில் தீன் டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட்ஸ் என்று பொறிக்கப்பட்ட மஞ்சள் பையில் ரூ. 90,000/- (500x100, 200x100, 200x100) காணப்பட்டது. மேலும் வாகனத்தின் பின்புறம் 7 எண்ணிக்கையிலான A4 அளவுள்ள பச்சை நிற threaded தபால் உறையில் சாலை போடப்பட்ட பின்பு ஆய்விற்காக வெட்டி எடுக்கப்படும் தார் மற்றும் ஜல்லிகளின் மாதிரிகள் காணப்பட்டது. மேலும் வாகனத்தின் பின் இருக்கையில் 176 பக்கங்கள் கொண்ட வரவு செலவு நோட்டு (accounts note) காணப்பட்டது. அதன் முதல் பக்கம் 23-04-2024 முதல் என்று எழுதப்பட்டிருந்தது. அந்த நோட்டை பார்வையிட சந்தேகத்திற்கிடமான செலவுகள் குறித்த குறிப்புகள் எழுதி வைக்கப்பட்டுள்ளன. இந்நோட்டின் 18ஆம் பக்கத்தில் சேர்மேனுக்கு ரூ. 775000, %5, 38750 என எழுதப்பட்டுள்ளது. 42ஆம் பக்கத்தில் BDO New 5000/-, AE HEMA 5000/-, என குறிப்பிடப்பட்டுள்ளது. 46ஆம் பக்கத்தில் ER HEMA 10,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 54ஆம் பக்கத்தில் AE 10000/-, AD 10000/-, office BDO 5000/-, Bill எழுத Bill Chat 1500/-, என குறிப்பபிட்டுள்ளது. அதே பக்கத்தின் அடியில் கமிஷன் 75000/- AE AD 30,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 55ஆம் பக்கத்தில் சேர்மென் ரமேஷ் வசம் 1,00,000/-, சேர்மேன் சமுத்திரவேல் வசம் ரூ. 1,00,000/-, ER Karthi 35,000/-, 74ஆம் பக்கம் BDO for Work

50,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது, 75ஆம் பக்கம் JDO+AE+2 1,200/- , AE Karthi 10,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 94ஆம் பக்கம் ER Karthi 20,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 97ஆம் பக்கம் BDO 1,00,000 என குறிப்பிடப்பட்டுள்ளது. 103ஆம் பக்கம் AE Asst 2,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 135ஆம் பக்கம் ER Karthi 10,000/-என குறிப்பிடப்பட்டுள்ளது. 136ஆம் பக்கம் ER Karthi Gpay அரவிந்த் 10,000/-என குறிப்பிடப்பட்டுள்ளது. 137ஆம் பக்கம் ER Karthi 23,000/-என குறிப்பிடப்பட்டுள்ளது. 142ஆம் பக்கம் AE Karthi 50,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 143ஆம் பக்கம் Dy BDO 500/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 144ஆம் பக்கத்தில் BDO - for TNJ 2,000/-, BDO - (2000+4000) 6,000/-, AE Karthi 11,500/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 145ஆம் பக்கத்தில் AD + Driver + OA 12,800, BDO 5,000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. 146ஆம் பக்கத்தில் BDO கண்ணனுக்கு transfer வைக்கக் கொடுத்தது 50,000/-, TNJ AD ஆடிட் 5000/- என குறிப்பிடப்பட்டுள்ளது. இதுகுறித்து திரு. இராமமூர்த்தி அவர்களிடம் விளக்கம் கேட்டபோது "எனது குடும்பத்தில் வாங்கிய பணத்தை செலவு கணக்கு காண்பிப்பதற்கு இந்த நோட்டில் எழுதி வைத்துள்ளேன்" என்று தெரிவித்தார். திரு. இராமமூர்த்தி அவர்களின் விளக்கம் ஏற்றுக்கொள்ள முடியாத காரணத்தால் மேற்சொன்ன சந்தேகத்திற்கிடமான ஆவணமான வரவு செலவு நோட்டு மற்றும் ரூ.90,000/- பணம் ஒப்பந்தப்பணிக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக எடுத்த வந்த பணம் என்று கருதி மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

16) திடீர் சோதனை நடவடிக்கைகள் தயார் செய்து கொண்டிருந்தபோது சுமார் 19.45மணியளவில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) திரு. சாமிநாதன் அவர்கள் சுனக்கமான நிலையில் காணப்பட்டார். அவரிடம் உடலில் ஏதேனும் குறைபாடு உள்ளதா என்று கேட்டபோது தனக்கு நீரிழிவு நோய் உள்ளதாகவும் அதனால் சர்க்கரை அளவு குறைந்தால் மயக்கம் வரும் என்று தெரிவித்தார். உடனடியாக அவரது அலுவலக ஓட்டுநர் திரு. மனோகரன் அவர்கள் துணையுடன் மருத்துவமனை செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டது. அவர் ஓட்டுநர் மனோகரன் அவர்கள் துணையுடன் அலுவலகத்திலிருந்து புறப்பட்டார். பின்னர் சுமார் 20.45 மணியளவில் மீண்டும் அலுவலகம் வந்து தனக்கு உடல்நிலை சரியாக உள்ளது என்று தெரிவித்தார் திடீர் சோதனை நடவடிக்கைகளுக்கு உடனிருந்தார்.

17) மேலும் திடீர் சோதனையின்போது சந்தேகத்திற்கிடமாக பணம் வைத்திருந்த நபர்களான (1) திருமதி.சுதா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், (சத்துணவு), (2) திருமதி.மகேஸ்வரி, உதவியாளர் (சத்துணவு), (3) திரு.மனோகரன், ஓட்டுநர், (4) திருமதி. பூர்ணிமா, தட்டட்சர் (5) திரு.வீரமுத்து, ஒப்பந்ததாரர், (6) திரு.இராமமூர்த்தி ஒப்பந்ததாரர்

ஆகியோரிடம் தனித்தனியாக மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்களால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

18) மேற்சொன்னவர்களில் திருமதி. சுதா, திரு. மகேஸ்வரி, திருமதி. பூர்ணிமா, ஆகியோர் பெண்கள் என்பதால் ஆய்வுக்குழு அலுவலர் மூலமாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் சுமார் 20.00 மணியளவில் அவர்களது வீட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

19) இந்த திடீர் சோதனையின்போது கீழ்கண்ட ஆவணங்கள் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

i) ஊராட்சி ஒன்றிய அலுவலக PU.56, Register of contractors 2023-24 & 2024-2025 (Total Pages 1-60, filled upto Page 12)

ii) Attested copy of திருவோணம் ஊராட்சி ஒன்றியம் அமைச்சுப்பணியாளர்கள் அலுவலக வருகைப்பதிவேடு. (தாள்கள் – 4)

(iii) Attested copy of திருவோணம் ஊராட்சி ஒன்றியம் களப்பணியாளர்கள் அலுவலக வருகைப்பதிவேடு. (தாள்கள் – 4)

(iv) தஞ்சாவூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரின் திடீராய்வு குறிப்பு நாள். 29-08-2024இன் நகல் (பக்கம் 1-6)

(iv) ஒப்பந்ததாரர் திரு. இராமமூர்த்தி அவர்களின் வரவு செலவு பதிவேடு (முதல் பக்கம் 23-04-2024 முதல்) என்று எழுதப்பட்டுள்ளது. (Pages 1-176)

20) இந்த திடீர் சோதனையின் போது ரூ.1,25,790/- மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

21) இந்த திடீர் சோதனை செயல்முறை நடவடிக்கைகளின்போது வட்டார வளர்ச்சி அலுவலரின் திரு. சாமிநாதன், உதவிப்பொறியாளர்கள் திரு. ரமேஷ், திரு. திருவாசகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலகர் திரு.நாகராஜன் ஆகியோர் உடனிருந்தனர். இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 15.10.2025 இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

22) இந்த திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட மேற்படி பணம் ஆவணம் வாக்குமூலங்கள் தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றை இத்துடன் இனைத்து ஆஜர் படுத்துகிறேன். இது குறித்து சட்டபடி உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். (sd) ஆ.ரவிக்குமார், முதுநிலை வருவாய் ஆய்வாளர், ஐ-2 பிரிவு, மாவட்ட

ஆட்சியரகம், தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர். Sir, the above mention petition with seized money in the proceedings cum mahazar has been received from Tr.A.Ravikumar, Senior Revenue Inspector, I-2 Section, Collectorate, Thanjavur, on 16.10.2025 at 10.30 hrs, found prima facie for the allegation of the complaint. Since the matter is intimated to the SP/CR, V&AC, Chennai and obtained permission from the SP/CR, V&AC, Chennai and registered a case in Thanjavur V&AC Crime Number. 07/2025 U/s 106 of BNSS and 7, 7A, 8 r/w 12 of Pc Act 1988 (as amended in 2018) on 16.10.2025 at 11.00 hrs (sd) P. Padmavathi, Inspector of Police, V&AC, Thanjavur.

Sir, the original FIR along with the Complaint, Surprise Check Proceedings and statements of accused are sent to the Principle District and Sessions Judge, Court, Thanjavur, other copies sent to the senior officers and concerned investigation officer.

Inspector of Police,
Vigilance and anti-Corruption
Thanjavur.